මුදල්, ආර්ථික ස්ථායීකරණ සහ ජාතික ප්‍රතිපත්ති අමාත්‍යාංශය
நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு
MINISTRY OF FINANCE, ECONOMIC STABILIZATION AND NATIONAL POLICIES

මහලේකම් කාර්යාලය, කොළඹ 01. ශ්‍රී ලංකාව
செயலகம், கொழும்பு 01. இலங்கை.
The Secretariat, Colombo 01. Sri Lanka.

කාර්යාලය / அலுவலகம் / Office: 011 - 2484500, 011 - 2484600, 011 - 2484700
ෆැක්ස් / தொலைநகல் / Fax: 011 - 2449823
වෙබ් අඩවිය / இணையத்தளம் / Website: www.treasury.gov.lk

| | | |
|---|---|---|
| මගේ අංකය / எனது இல. / My No. NPD/DCB/2024/GEN | ඔබේ අංකය / உமது இல. / Your No. | දිනය / திகதி / Date 2024.04.30 |

நிதி அமைச்சின் சுற்றறிக்கை: MF/02/2023 – 1

அனைத்து மாவட்ட செயலாளர்களுக்கும்,

**<u>பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத் திட்டம் - 2024</u>**

2024 இன் பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத் திட்டம் தொடர்பாக 29.12.2023 திகதியிடப்பட்டு வெளியிடப்பட்ட நிதி அமைச்சின் சுற்றறிக்கை எண் MF/02/2023 இன் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட அனைத்து கருத்திட்டங்களும் 31.07.2024 இற்கு முன்பதாக நிறைவு செய்யப்படல் வேண்டும். எனினும், புதிய கருத்திட்ட முன்மொழிவுகள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட கருத்திட்டத் திருத்தங்கள் மாவட்ட மட்டத்திலிருந்து இச்சந்தர்ப்பத்திலும் தேசிய திட்டமிடல் திணைக்களத்திற்கு அனுப்பப்படுவதுடன், அம்முன்மொழிவுகள் தொடர்பான திருத்தங்கள் காணப்படின், கருத்திட்டங்களைச் செயற்படுத்துவதில் மேலும் தாமதம் ஏற்படலாம்.

02. எனவே, மேற்படி சுற்றறிக்கையின் 3.4 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள கருத்திட்ட முன்மொழிவுகளைத் திருத்துவதற்கான கால அவகாசம் 2024 மே 15 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதுடன், அத்தினத்திற்குப் பின்னர் எவ்வித கருத்திட்டத் திருத்தங்களுக்கும் அனுமதி வழங்கப்பட மாட்டாது.

03. மேலும் இத்திருத்தங்களை மேற்கொள்வதில் ஏற்படக்கூடிய காலதாமதத்தைத் தவிர்ப்பதற்கு, பின்வரும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு கருத்திட்டத் திருத்தங்களை மேற்கொள்வதற்கான அதிகாரத்தை நான் உங்களுக்கு வழங்குகிறேன்.

1. தேசிய திட்டமிடல் திணைக்களத்தினால் ஜனாதிபதி செயலகத்திற்கு அனுப்பப்படுகின்ற கருத்திட்டங்களுக்கு மாத்திரம் தேவையான திருத்தங்களை மேற்கொள்ளவதற்கு இயலுமாவதுடன் அத்திருத்தப்பட்ட கருத்திட்டங்கள் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவு வேலைத் திட்டத்திற்காக வெளியிடப்பட்ட 29.12.2023 திகதியிடப்பட்ட, எண். MF/02/2023, சுற்றறிக்கையுடன் இணங்க வேண்டும்.
2. 2024 ஆம் ஆண்டின் பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத்திட்ட சுற்றறிக்கையில் இலக்கம் 2 இல் குறிப்பிடப்பட்டுள்ள அபிவிருத்திப் பிரிவுகளின் கீழ் இனங்காணப்பட்ட கருத்திட்ட வகைக்குள் காணப்படுகின்ற கருத்திட்டங்கள் மாத்திரமே திருத்தங்களிற்கு உட்படவேண்டியதுடன் அத்திருத்தங்கள் குறித்த பிரதேச செயலகத்திற்குள் மேற்கொள்ளப்படல் வேண்டும் (உ.ம். இலக்கம் 2.5 இன் கீழ், வீதி அபிவிருத்திக் கருத்திட்டத்திற்கான திருத்தங்களானது அதே பிரதேச செயலகத்திற்குள்ளான பிறிதொரு பொருத்தமான வீதிக் கருத்திட்டத்திற்கு மாத்திரமே இயலும்).
3. சுற்றறிக்கையில் இலக்கம் 2 இன் கீழ் அபிவிருத்திப் பிரிவில் நிர்மாண நடவடிக்கைகளிற்காக அங்கீகரிக்கப்பட்ட கருத்திட்டங்கள் கொள்வனவு செய்தல் கருத்திட்டமாக திருத்தங்களை மேற்கொள்வதற்கு முடியாது என்பதுடன் அதே அபிவிருத்திப் பிரிவில் காணப்படுகின்ற கொள்வனவு செய்தல் கருத்திட்டமாகக் காணப்படுபவை நிர்மாணக் கருத்திட்டமாகத் திருத்தங்களை மேற்கொள்வதற்கு முடியும்.

4. இத்திருத்தங்கள் மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீடுகளின் எல்லைக்குள் காணப்படல் வேண்டும்.

5. மேற்கொள்ளபடுகின்ற கருத்திட்ட திருத்தங்கள் தொடர்பான தகவல்கள் இணைப்பு 1 ல் குறிப்பிடப்பட்டுள்ள படிவத்தின் பிரகாரம், குறித்த மாவட்டச் செயலாளரினால் ஜனாதிபதி செயலகம், தேசிய திட்டமிடல் திணைக்களம், தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களம் மற்றும் கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் மேற்பார்வைத் திணைக்களம் என்பனவற்றிற்குச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மேலும், கருத்திட்டங்களை செயற்படுத்துவதற்கு முன்பதாக, இத்திருத்தப்பட்ட கருத்திட்டங்களுக்கு, மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் ஒப்புதலைப் பெறல் வேண்டும்.

6. மேலே 1 முதல் 5 வரையிலான இலக்கங்களில் குறிப்பிடப்பட்டுள்ள திருத்தங்களைத் தவிர வேறு கருத்திட்டத் திருத்தங்கள் காணப்படின், அக்கருத்திட்ட முன்மொழிவுகள் தேசிய திட்டமிடல் திணைக்களத்திற்கு விரைவில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

7. இதுவரையில் தேசிய திட்டமிடல் திணைக்களத்திற்கு கருத்திட்ட திருத்தங்களிற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள கருத்திட்டங்கள் மேலே குறிப்பிடப்பட்டுள்ள விதத்தில் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு தெரிவித்துக் கொள்கிறேன்.

8. அங்கீகரிக்கப்பட்ட கருத்திட்ட முன்மொழிவுகள் 2024 மே 15 க்குப் பின்னர் திருத்தங்களை மேற்கொள்வதற்கு முடியாது.

ஒப்பம்: கே. எம். மஹிந்த சிறிவர்தன
செயலாளர்

பிரதிகள் -

1. கௌரவ மாகாண ஆளுநர்கள் - தயவுடன் தகவலிற்காக
2. அனைத்து மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு தலைவர்கள் - தயவுடன் தகவலிற்காக
3. ஜனாதிபதியின் செயலாளர் - தயவுடன் தகவலிற்காக
4. பிரதமரின் செயலாளர் - தயவுடன் தகவலிற்காக
5. அனைத்து மாகாண பிரதான செயலாளர்கள் - தயவுடன் தகவலிற்காக
6. கணக்காய்வாளர் நாயகம் - கணக்காய்வாளர் திணைக்களம் - தயவுடன் தகவலிற்காக
7. செயலாளர், பொது நிர்வாக, உள்நாட்டு அலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு - தயவுடன் தகவலிற்காக
8. செயலாளர், மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சு - தயவுடன் தகவலிற்கு, அ. ந
9. பணிப்பாளர் நாயகம், தேசிய திட்டமிடல் திணைக்களம் - தயவுடன் தகவலிற்கு, அ. ந
10. பணிப்பாளர் நாயகம், தேசிய வரவு செலவு திட்டத் திணைக்களம் - தயவுடன் தகவலிற்கு, அ. ந
11. பணிப்பாளர் நாயகம், கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் மேற்பார்வைத் திணைக்களம் - தயவுடன் தகவலிற்கு, அ. ந
12. பணிப்பாளர் நாயகம், திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களம் - தயவுடன் தகவலிற்கு, அ. ந
13. பணிப்பாளர் நாயகம், சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களம் - தயவுடன் தகவலிற்கு, அ. ந
14. அனைத்து மாவட்டத் திட்டமிடல் பணிப்பாளர்கள் - தயவுடன் தகவலிற்கு, அ. ந
15. அனைத்து பிரதேச செயலாளர்கள் - தயவுடன் தகவலிற்கு, அ. ந

இணைப்பு 1

# பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவு வேலைத்திட்டம் - 2024
## கருத்திட்டத் திருத்தம்

மாவட்டம் - ..................................

| ஒப்புதல் எண் | பி. செ பிரிவு | அங்கீகரிக்கப்பட்ட கருத்திட்டத்தின் பெயர் | சுற்றறிக்கை 2 இல் அபிவிருத்திப் பிரிவிற்கு அமைவாக அபிவிருத்திப் பிரிவு | பெறுமதி (ரூ.) | | திருத்தப்பட்ட கருத்திட்டத்தின் பெயர் | சுற்றறிக்கை 2 இல் அபிவிருத்திப் பிரிவிற்கு அமைவாக அபிவிருத்திப் பிரிவு | பெறுமதி (ரூ.) | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | நிர்மாணக் கருத்திட்டம் | ஏனைய கருத்திட்டம் | | | நிர்மாணக் கருத்திட்டம் | ஏனைய கருத்திட்டம் |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| மொத்தம் | | | | | | | | | |

தயாரிக்கப்பட்டது -

பரிந்துரை -

.......................................................

மாவட்டத் திட்டமிடல் பணிப்பாளர்

அங்கீகாரம் -

.............................................

மாவட்டச் செயலாளர்